உ

கடவுள் துணை.

நாட்டுச்செல்வருக்கு நல்வழிக்காட்டும்

நன்னெறிக் கும்மியும்,

லாக்கால்பத்திரிக்கும்மியும்,

அடங்கியிருக்கின்றன.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதறாஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1914

17-18 காளத்தியப்ப முதலி வீதி மதறாஸ் என். சி.

உ

கடவுள் துணை.

நாட்டுச்செல்வருக்கு

நல்வழிகாட்டும நன்னெறிக்கும்மி.

முதற்பாகம்-நூன்முகம்.

கள்ளுசாராயங்குடியாதே அபின்
கஞ்சாவெறியால் மயங்காதே
உள்ளமயங்கிடும் கண்ணுஞ்சிவந்திடும்
ஓட்டாண்டியுமாவாய் மானிடனே. 1

கொஞ்சங்கொஞ்சமாய்க் குடித்திடுவாய்பின்
கூடும்பொருளை யழித்திடுவாய்
மிஞ்சிகடன்களும் வாங்கிடுவாய்நல்ல
மேனிமெலியுமே மானிடனே. 2

வார்த்தைகுளறிடும் வாயதுநாறிடும்
வம்பானவார்த்தைகள் பேசச்சொல்லும்
பார்த்தவர்கெட்ட குடிக்காரனென்றுனைப்
பங்கமாய்ச்சொல்லுவார் மானிடனே. 3

நித்தம்நினைப்பாக வேயிருக்கும் சற்று
நேரம்குடியா திருந்துவிட்டால்
பித்தம்பிடித்தவன்போலிருக்கும் கெட்ட
பிரமையுண்டாகுமே மானிடனே. 4

மேடுபள்ளமென்றுங் காணாது கெட்ட
மூத்திரமலங்களும் தோணாது
சாடும்தடுமாறி தள்ளாடிவீழ்ந்து
சவம்போல்கிடப்பாயே மானிடனே. 5

தள்ளாடிதத்தி நடக்கச்சொல்லும் வீணில்
சண்டைகள்போடவும் தூண்டிவிடும்
சொள்ளையிலடித்து டாணுவில்கொண்டுபோய்
துளையில்மாட்டிடும் மானிடனே. 6

நெஞ்சமுலர்ந்திடும் மூளைவரண்டிடும்
நேசமும்பாசமு மற்றுவிடும்
பஞ்சையாபெங்குமே பேசச்செய்யுமத்தால்
பவுசும்போய்விடும் மானிடனே. 7

அசுரர்குருவான சுக்கிராச்சாரி
ஐயோமதுவை குடித்ததனால்
நசியவயிறு கிழியலாயினதை
நாடெங்குஞ்சொல்லுவார் மானிடனே. 8

ஆணுவமாகத்திரியாதே சூது
ஆடும்விடந்தனில் போகாதே
தோணவேகற்றுநீ கொள்ளாதே யதின்
தொல்லையேகேழ்ப்பாயே மானிடனே. 9

பக்கத்திலும்நின்றுபாராதே சொர்ப்ப
பந்தயங்கட்டியு மாடாதே
ரொக்கப்பணஞ்சிலதோற்றுவிட்டால் பொல்லா
ரோஷங்களாகுமே மானிடனே. 10

விட்டபணத்தை பிடிக்கநாடியய்யோ
மின்னும்பின்னும்வைத்து ஆடிடுவாய்
பெட்டிபணத்தை யிழுத்துக்கொள்ளுங்கெட்ட
பேய்போலலைவாயே மானிடனே. 11

எவ்வளவுபணம்வைத்தாலும் ஆட
ஏக்கமுந்தூக்கமும் இல்லாமல்
அவ்வளவுபணம் தோர்த்திடிலுங்கடன்
ஆரையுங்கேழ்ப்பாயே மானிடனே. 12

கடன்கொடுக்கவே நாடார்களுன்னை
கண்டவர்பேசவும் மாட்டார்கள்
திடமுடன்பெட்டி தானுடைத்துப்பொருள்
திருடச்சொல்லுமே மானிடனே. 13

பெட்டியுடைத்துதிருடச்செய்யும் அதை
போலீசார்கண்டு பிடிக்கச்செய்யும்
கட்டியடித்து விலங்கிட்டுவேலையில்
கஸ்திப்படச்செய்யும் மானிடனே. 14

நாடாண்டதர்மன் நளனுமிச்சூதாலே
நாடுநகரமுந் தோற்றுவிட்டு
காடேகதியா யலைந்தகதைகளைக்
காதினல்கேட்டறி மானிடனே. 15

சூதினல்கெட்டவர் மெத்தவுண்டு அந்த
துன்பத்துக்கு இடம்வையாமல்
சூதைவிலக்கென்று அவ்வைவீதிசொன்ன
சொல்லையும்நம்புவாய் மானிடனே. 16

எல்லாதொழிலும் செய்திடலாகுஞ் சற்றே
ஏறக்குறைய நடத்திடலாம்
பொல்லாதசூதை விரும்பினல்மண்ணில்
போகுமேவாழ்வெல்லாம் மானிடனே. 17

முற்பாதி-முற்றிற்று.

மண்டலத்துமானிடர் மதியைமயக்கும்
லாக்காஸ்பத்திரிக்கும்மி
பிற்பாதி-நூன்முகம்.

மாதர்வலைக்குள்ளே செல்லாதேகெட்ட
வார்த்தைகளைப்பேசி வெல்லாதே
பாதகிதோதகி போதனைகளெல்லாம்
பகர்வேன்கேட்பாயே மானிடனே. 18

கூழுக்குப்பில்லாத பாதகியுங்கஞ்சி
குடிக்கவோடில்லா மூதேவியும்
தாழப்படுத்து யுருண்டவளும் மிக்க
சண்டியுங்கள்ளியும் மானிடனே. 19

மஞ்சள்குளித்து மினுக்கிடுவாள் மிக
மணங்கள்பூசி குலுக்கிடுவாள்
கொஞ்சியேமுத்தமுந் தந்திடுவாள்கெட்டக்
கொள்கையைக்கண்டறி மானிடனே. 20

மல்லிகைமுல்லை யணிந்திடுவாள் சிறு
வட்டமாய்ப்பொட்டுமே யிட்டுக்கொள்வாள்
மெல்லியசல்லா வுடுத்திக்கொள்வாள் மிக
வேடிக்கைக்காட்டுவாள் மானிடனே. 21

நித்தியமும்ஸ்தானம் செய்திடுவாள் சற்று
நேரமொருசீலை கட்டிக்கொள்வாள்
எத்திப்பறிக்க யுலாத்திடுவாள் ஐயோ
யேமாந்துபோகாதே மானிடனே. 22

அம்மா அக்காவென் றும் கூப்பிடினும்பாவி
அண்டிபரியாசஞ் செய்திடுவாள்
சும்மா அடிக்கடி வந்திடுவாளுன்னை

மண்டலத்துமானிடர் மதியைமயக்கும்
தொல்லைக்குள்ளாக்குவாள் மானிடனே. 23

பல்லுவிழுந்தகிழவி ஐயோ சிறு
பையனைமாப்பிள்ளை யாகக்கொண்டு
அல்லும்பகலுஞ் சிங்காரஞ்செய்கின்றதை
அறிவாயோசற்றும் மானிடனே. 24

பாவிலேசத்தியஞ்செய்திடுவாள் உண்ணும்
பருக்கைமீதி லடித்திடுவாள்
கோவிலில்சென்று முறுதிசொல்வாளதைக்
கொஞ்சமும்நம்பாதே மானிடனே. 25

அய்யாவேகொப்பு ஜிமிக்கியென்பாளெங்கள்
அத்தனேமூக்குத்தி நத்துயென்பாள்
கையிற்குத்தங்க வளையலென்பாளதை
கண்டுதெளிவாயே மானிடனே. 26

சிங்கத்தலைக்காப்பு தோடாவென்பாளென்றன்
சீமானேகோமானே யாழியென்பாள்
தங்கச்சரடுகள் வேணுமென்பாளதைத்
தாராவிடில்பேசாள் மானிடனே. 27

கல்லிழைத்தநகை வேணுமென்பாளெந்தன்
கர்த்தாவேநல்லதாய் வாங்குமென்பாள்
பல்லையுங்காட்டி பசப்புவாள்சொல்லைநீ
பட்சமென்றெண்ணாதே மானிடனே. 28

வாங்கியகடன்கள் தீராவிட்டால் ஐயோ
வாரண்டும்சம்மனும் வந்துவிடும்
பாசாங்குசெய்வாளென் றெண்ணாதேயுன்றன்
படுக்கையைக்காட்டுவாள் மானிடனே. 29

காசும்புகழையும் வாங்கிக்கொள்வாள்பெரும்
கட்டியும்புண்ணையுந் தந்திடுவாள்
நாசமடையவே பாராதேயெந்நாளும்
நல்வழிச்சாருவாய் மானிடனே. 30
காசமிருமலும் வந்திடுமேகெட்ட
கண்டமாலைசூலை வந்திடுமே
கூசடாகுச்சுக் காரிகளினுசையைக்
கொள்ளாதேசற்றும்நீ மானிடமே. 31
நீர்க்கடுப்பும்வெள்ளை கண்டிடுமே மிக
நெஞ்செல்லாம்வற்றி யுலர்ந்திடுமே
பார்மீதில்குச்சுக் காரிகளின்பாதத்தைப்
பாழாக்குவாய்திவ்ய மானிடனே. 32
வீரம்பூரம்ரசம் தின்னவேவாய்த்திடும்
வீங்கியேகால்கையும் சேர்ந்துவிடும்
சோரம்போகாதேநீ கற்புள்ளகன்னியைச்
சோபனஞ்செய்குவாய் மானிடனே. 33
மூத்தவளோடுநீ சேராதேபொல்லா
மூதேவியுன்னைத் தொடர்ந்துகொள்வாள்
ஆத்திரங்கொண்டுநீ பேசாதேயுன்றன்
ஆயுளுங்குன்றுமே மானிடனே 34
தாய்ப்போலேமாதரைத் தேடாதே தம்பி
தமையன்பெண்டோடுஞ் சேராதே
நாய்ப்போலேநாடி யலையாதேபொல்லா
நமன்கொண்டோடுவான் மானிடனே. 35

சந்திரன்கெட்டதும் பெண்ணாலேதேவர்
தாருகாவிட்டதும் பெண்ணாலே
இந்திரன்திரேகம் முழுவதும்வின்னமாய்
போனதும்பெண்ணாலே மானிடனே. 36

கோவிலன்கெட்டதும் பெண்ணாலேதவம்
கோசிகன்விட்டதும் பெண்ணாலே
ஆல்தவஞ்செய்த பத்மாசூரன்
அழிந்ததும்பெண்ணாலே மானிடனே. 37

சண்டையுந்தெண்டமும் பெண்ணாலே குத்து
தட்டுவெட்டுதிட்டம் பெண்ணாலே
மண்டையுடைவதும் தூக்கிலேநிற்பதும்
மங்கையாலல்லவோ மானிடனே. 38

எத்தனைபேர்களோ பெண்ணாலேகெட்டது
எண்ணவெழுத முடியாதே
பத்தினியாகிய கலியாணமாதரின்
பட்சத்தைப்பாராட்டு மானிடனே. 39

பாவிக்கழிக்கும் பொருளையெல்லாஞ்சேர்த்து
பாதையில்மடமு மில்லாமல்
கோயில்குளங்களைச் செய்துவைத்தால்யாரும்
கொண்டாடுவாரேநல் மானிடனே. 40

சிந்தைவருந்திப் பொருளைத்தேடி யிந்தச்
சீர்கெட்டமாதர்க் கழிக்காமல்
நந்தவனங்கள் குளங்களைக்கட்டினால்
நற்பதவிதரும் மானிடனே.

பிற்பாதி - முற்றிற்று.

கடவுள் துணை.

செல்வப்பெண்கள் தாலாட்டு.

ஆண்.

ஆராரோ ஆரரெரோ ஆணரசே ஆரரெரோ
சீராரு மென்றன் குல தீபமே ஆரரெரோ. 1

சீர்மேவு மாமணியே தேடக்கிடையா வணியோ
பார்மேவு கண்மணியே பாலகனே கண்வளராய். 2

எங்கள் குலபாக்கியமே எல்லோர்க்கும் பாக்கியமே
மங்களஞ்சேர் தெள்ளமுதே மைந்தனே கண்வளராய். 3

வண்ண மணித்தொட்டிலிலே வாய்த்த செம்பொற் கட்டி
லிலே கண்ணே யென் கண்மணியே கற்பகமே கண்வளராய்

சோலைக்கிளியே சுடர்விளக்கே பொன்னொளியே
ஆலைக்கரும்பே யென் ஆரமுதே கண்வளராய். 5

முத்துச்சரந் துலங்க மோகனமாலைகளிங்கக்
கொத்துமணி குலுங்கக் கோமகனே கண்வளராய். 6

முத்துக்குடை பிடிக்க முன்னூற்கவி படிக்கச்
சித்திரத்தேரேறி வரும் செல்வமே கண்வளராய். 7

மன்னர் புடைசூழ்ந்துவர மாற்றரசர் தாழ்ந்துவர
உன்னிதமாய்ப் பவனிவரும் உத்தமனே கண்வளராய். 8

மன்னுஞ்செங்கோலெங்குஞ் செல்ல மந்திரிகள் புத்திசொ
ல்லத் தென்னவன் போலரசாளும் தேர்வேந்தே கண்வளா

திக்கெட்டுமன்னர்வந்து செல்லும்பகுதிதந்து
மிக்கபதம்வணங்கும் வேல்வேந்தேகண்வளராய். 10
அன்னக்கொடிபறக்க ஆலயப்பூசைகள்சிறக்க
மன்னுந்தர்மங்கள்செய்துவரும் வள்ளலேகண்வளராய்.
வெற்றிமுரசறைய வீரமன்னர்தாம்நிறைய
உற்றபேர்வென்றுவரும் ஓங்கரசேகண்வளராய். 12
வாசப்பனிநீர்தெளிக்க மாற்றரசர்தாமொளிக்கத்
தேசமெங்குஞ்சாரிவரும் தேசிகனேகண்வளராய். 13
முத்துச்சிவிகையுள்ளே முத்துக்கவிகைகளே
சித்தமகிழ்ந்தேறிவரும் சிரோமணியேகண்வளராய் 14
ஆலவட்டம்வீசிவர அந்தணர்களாசிதரக்
கோலம்வருமெங்கள் குலக்கொழுந்தேகண்வளராய் 15
தண்டைபணிசத்தமிடத் தாய்மார்கள்முத்தமிடத்
தொண்டைவாய்மூடியெங்கள் துரைமகனேகண்வளராய்
அத்தைமனம்நோவாமல் அன்னைமனம்நோவாமல்
சித்தமிரங்கிமன்னர் சிகாமணியேகண்வளராய் 17
தாய்மார்கள்வைதாரோ தாதியரென்செய்தாரோ
வாயாரச்சொல்லியெங்கள் மன்னவனேகண்வளராய் 18
அத்தைபடித்தாளோ அக்காளிடித்தாளோ
முத்தானவாய்திறந்து மொழிந்துறங்காய்கண்மணியே.
மாமியவள்குட்டினளோ மாபாவிதிட்டினளோ
சாமியேயுன்மனது சலித்ததென்னகண்மணியே 20
மைத்துனர்களேசினரோ மனம்நோகப்பேசினரோ
சித்தஞ்சலித்தழுது தேம்புவதேன்கண்மணியே 21
தங்கத்தாலானைகளும் தங்கத்தாற்சேனைகளும்

பொங்கமாயான்கொடுப்பேன் புத்திரனேகண்வளராய்
அம்மான்பொற்றேர்கொடுப்பார் ஆடும்பரிவிடுப்பார்
எம்மானேநீயுமன்பாய் ஏறுவாய்கண்வளராய் 23
மார்பிற்பதக்கமின்ன மகரகண்டியாரந்துன்ன
சீர்பெறுபூந்தொட்டிலுள்ளே தேனேநீகண்வளராய் 24
பஞ்சவர்ணக்கிளிகொஞ்சப் பாரக்குயிலோசைமிஞ்ச
எஞ்சலில்லாப்பஞ்சணையில் என்மகனேகண்வளராய் 25
சோலைமயிலாடிவரச் சுரும்பினங்கள்பாடிவர
மாலைமணிமாலையணி வாழ்வரசேகண்வளராய் 26
மாதர்மலர்மாரிபெய்ய மன்னர்பணிவந்துசெய்ய
காதலுறுநாளுமெங்கள் களஞ்சியமேகண்வளராய் 27
வாசல்மணிததழுங்க மங்களவாழ்த்தியமுழங்கத்
தேசமன்னர்கொண்டாடத் திரவியமேகண்வளராய் 28
தங்கவடந்தானசையத் தந்தத்தொட்டிலின்மேலிசைய
துங்கப்பெண்கள்தொட்டாட்டச் சுந்தரமேகண்வளராய்
தந்தையொருபக்கநிற்கத் தாயுமறுபக்கநிற்கத்
சிந்தைமகிழ்ந்தேபார்க்கும் தெருட்கடலேகண்வளராய்
தேனேமலர்ச்சுரும்பே தித்திக்குந்தீங்கரும்பே
மானமுடனூட்டுந்தாய் மார்வருவார்கண்வளராய் 31
தந்தத்தாற்றண்டிகையும் தங்கத்தாற்கண்டிகையும்
எந்தைகொண்டுதான்வருவார் எழிற்கடலேகண்வளரா
பொன்னுலமிதியடியும் புகழுமணிமுடியும்
முன்னுகப்பாட்டிதந்தாள் முக்கனியேகண்வளராய் 33
பொற்சரிகைவத்திரமும் போற்றுபலசித்திரமும்
நற்சரிகையங்கியுமே நான்தருவேன்கண்வளராய் 34

பொன்னாலெழுத்தாணி பூமிபலகாணி
எந்நாளுஞ்சொந்தமதா யான்கொடுப்பேன்கண்வளராய்
வாடிமுகம்வீங்கி மனதுதளர்ந்தேங்கிப்
பாடியழவேண்டாமென் பார்த்திபனேகண்வளராய் 36
முத்தளக்குஞ்சாலையிலே முதலளக்குஞ்சோலையிலே
அத்தைமகள்வந்ததைக்கண் டரசேநீகண்வளராய் 37
கண்காட்டுமாதர்பலர் கைக்காட்டுமாதர்சிலர்
பண்காட்டுவார்க்கிரங்கிப் பாலகனேகண்வளராய் 38
துள்ளததுடிக்கத் தோகையர்கைகால்பிடிக்க
மெள்ளமருந்தளிப்பார் வேந்தனேகண்வளராய் 39
காட்டுப்புலியானை கரடிசிங்கமவன்பூனை
ஓட்டிவிட்டேன்கண்மணியேஉவப்புடனேகண்வளராய்
பட்டாடப்பொட்டாடப் பணியாடமணியாடத்
தொட்டோடுந்தொட்டிலுள்ளே தோன்றலேகண்வளரா
தீர்த்தம்பலதேடித் திருமஞ்சனமாடிக்
கீர்த்திபெற்றதந்தைமைந்தர் கிட்டவந்தார்கண்வளரா
வண்ணமலரெடுத்து மாலைமிகத்தொடுத்து
பெண்ணரசிமார்கள்வந்தார் பேரரசேகண்வளராய் 43
சாந்துபனிநீர்வாசச் சவ்வாதுதான்வீச
ஏந்திழைபாரேந்திவந்தார் என்னரசேகண்வளராய் 44
தோள்குலுங்கக்கைகுலுங்கச் சொல்லுந்தருமெய்குலுங்
க தாள்குலுங்கவாள்குலுங்கத் தார்வேந்தேகண்வளராய்
தார்மன்னர்தாமெடுக்கச் சத்துருக்கள்வெண்கொடுக்கப்
போர்வென்றகீர்த்திபெறும் பூபதியேகண்வளராய் 46
கன்னன்கொடைமாறக் கலியடைந்தோர்தான்விறச்

சொன்னமளிக்குமெங்கள் சுத்தனேகண்வளராய் 47
மாரனழைகொழிய மாதர்மகள்கொண்டழிய
தீரமுடன்வந்துதித்த சித்திரமேகண்வளராய் 48
சொல்லிலரிச்சந்திரனே சுகபோகவிந்திரனே
வில்லிலருச்சுனனே விண்மணியேகண்வளராய் 49
எங்கள் குலம்பெருக என்வகைப்பாக்கியம்வருக
மங்களமாம்வந்துதித்த மகிபதியேகண்வளராய். 50

ஆண்பாற்றாலாட்டு - முற்றிற்று.

பெண் தாலாட்டு.

ஆரரெரோ ஆரரெரோ அரிவையரோ ஆரரெரோ
சீராருந்தெள்ளமுதே தெரிவையரே ஆரரெரோ.

தத்தைமொழிமின்னரசே தாரணிந்தவென்னரசே
சித்தமகிழ்ந்து தெரிவையரேநித்திரைசெய் 1
அன்னநடைக்கண்மணியே அரிவையர்கள்விண்மணியே
பொன்னிழைத்ததொட்டிலுள்ளே பூவையரேநித்திரை
வண்ணமடமயிலே மாமரத்தில்வாழ்குயிலே
பெண்ணரசேபஞ்சணைமேல் பிரியமுடநித்திரைசெய் 3
மின்னவிடைமங்கையரே வீறுமென்றன்றங்கையரே
கன்னல்மொழித்தெள்ளமுதேசாரிழையேநித்திரைசெய்
முக்கனிபோற்சொல்லாளே மொழிபுருவவில்லாளே
மாணிக்கத்தொட்டிலுள்ளே மெல்லியரேநித்திரைசெய்
கண்ணிற்குமைதீட்டி காலிற்பணிபூட்டிப்
பெண்ணரசியாய்வளர்க்கும் பேதையரேநித்திரைசெய்
வண்ணமலர்சூட்டி மன்னும்பணிபூட்டித்
திண்ணமுடன்வளர்க்கும்தேன்மொழியேநித்திரைசெய்

பொன்னாலைரமுடிப் பொற்கயிற்றினாற்சூடி
மன்னர்மெச்சத்தான்வளர்க்கும் மாதரசேநித்திரைசெய்
பட்டுத்துயில்விரித்துப் பாவாடைமேற்றரித்துப்
பொட்டிட்டுதான்வளர்க்கும்பெண்மயிலேநித்திரைசெய்
வாசப்பனிநீராட்டி மன்னும்வளைகைப்பூட்டி
ஆசையுடன்வளர்க்கும் அன்னமேநித்திரைசெய் 10
பந்தடிக்கும்பெண்களோர்பால் பாடிவரும்பெண்களோர்
பால்வந்துதொழுமெல்லணையில்வாணுதலேநித்திரைசெ
ட்டிக்கருப்பூரம்பற்றிக் கன்னிகையேயுன்னைச்சுற்றி
திட்டிகழிக்குமுன்னே செந்தேனேநித்திரைசெய் 12
கோலங்கொடுத்தே கூறைமி வடுத்தே
ஆலமெடுக்குமுன்னே அம்பொன்னேநித்திரைசெய் 13
குச்சுக்குப்பித்தான்முடித்துக் கொய்சகமுந்தான்மடித்
துக் கச்சிதமாய்க்கட்டிவளர் கார்குழலேநித்திரைசெய்
உத்தமியாளெனுமிராதி உன்னழகைக்கண்டுதுதி
நித்தம்வந்துசெய்துநிற்கும் நேரிழையேநித்திரைசெய்
நீடுமொருநாளையிலே நினைத்தபலவேளையிலே
வாடியழுவதென்ன வாழ்மயிலேநித்திரைசெய் 16
அத்தைமகனார்வந்தார் ஆயிரம்பொன்சேலைதந்தார்
சித்தமகிழ்வாய்நீ இறமுடனேநித்திரைசெய் 17
மாமண்மணிமாலை மாசிலாப்பொற்சேலை
பூமாலையோடளித்தார் பொற்கிளியேநித்திரைசெய் 18
பொன்னடுப்புப்பொன்துடுப்பு பொன்மணிசேர்நல்லுடு
ப்புயன்னைகொணர்ந்திங்குவைத்தாளாரியேநித்திரைசெ
பூவாலேசெண்டும் பொசித்திடநற்கற்கண்டும்

ஆவலாய்த்தாய்கொடுத்தாள் ஆயிழையேநித்திரைசெய்
தங்கத்தாற்கட்டிமுட்டி சாதமுண்ணவெள்ளிவட்டி
உங்களையர்கொண்டுவந்தார் உத்தமியேநித்திரைசெய்
தங்கத்தாற்பொற்பாவை தாளவடகோவை
அந்தமுடன்பாட்டிதந்தாள் அம்மணியேநித்திரைசெய்
பாதசரம்பாடகமும் பட்டில்மின்னூலாடகமும்
தாதியர்கள்வந்துதந்தார் தையலேநித்திரைசெய் 23
வயிரத்தானற்காப்பும் வண்ணமணிச்சிப்பும்
உயிர்த்தோழிமார்கொடுத்தார்உத்தமியேநித்திரைசெய்
தேம்பியழுவதென்ன தெத்திவிழுவதென்ன
காம்பனையதோழியரே கண்மூடிநித்திரைசெய் 25
நடைபழக்கப்பாவாடை நடுபரப்பிப்பூவாடை
படைவிழியேநீகடப்பாய் பஞ்சணையில்நித்திரைசெய்26
அத்தைமேற்கோபமா அவளில்மனஸ்தாபமோ
கொத்தாரும்பூங்குழலே கோமகளேநித்திரைசெய் 27
ஓதும்பெரும்வாழ்வு உனக்கென்னசொருழ்வு
போதக்கிளியே பூவணியேநித்திரைசெய் 28
ஏழுநிலைமாடமதில் ஏகாந்தக்கூடமதில்
வாழுமயிலேகுயிலே வாழ்வரசேநித்திரைசெய் 29
முத்துபல்லக்கேறு மூதுலகிலேவீறிச்
சித்திரமேசாரிவரும் சேயிழையேநித்திரைசெய் 30
வாடியழுதகண்ணீர் மஞ்சள்குளித்ததண்ணீர்
ஓடிப்பெருங்கடலாய் ஒழிந்ததம்மாநித்திரைசெய் 31
பள்ளாங்குழிபாடிவந்தாய் பந்தடித்துமிக்கநொய்து
கள்ளத்தனமநானறிவேன் கன்னியேநித்திரைசெய் 32

சித்திரத்தேஎழுதவொண்ணாத் திருவுருவேமலர்மருவே
புத்திரியேமித்திரியே பூங்கனியேநித்திரைசெய் 33
மானேபசுந்தேனே மருட்டுவிழிமீனே
நானேமகிழவந்த நாயகமேநித்திரைசெய் 34
பூதங்கண்டுதான்வெருண்டாய் புலியைக்கண்டுநீமருண்
டாய் நீதமந்திரம்புரிந்து நீறுவேநித்திரைசெய் 35
சொல்லும்நவமணிகள் சோதிமிகுபொற்பணிகள்
வல்லபலபேகலைபூண் மைவிழியேநித்திரைசெய் 36
எங்கள்குலம்விளங்க எழிலார்மனைதுலங்கப்
பொங்கமதாய்வந்துதித்த பொன்னேநீநித்திரைசெய் 37
மாணிக்கதீபமே மதனரதிரூபமே
ஆணிக்கனகமே ஆரணங்கேநித்திரைசெய் 38
ஆசைக்கடலேயென் னபராஞ்சியாமுடலே
ஓசைக்குயிலே ஒளிமயிலேநித்திரைசெய் 39
பிள்ளைகலிதீர்க்கவந்த பெண்ணமுதேவிண்ணமுதே
தெள்ளுமணியே திகழ்விளக்கேநித்திரைசெய் 40
தங்கவடமபூட்டித் தாதிமார்கொட்டாட்டிப்
பொங்கமுடன்வளர்க்கும் பொற்கொடியேநித்திரைசெய்
கும்பமுலைதிறந்து கோதையர்கள்பால்கறந்து
செம்பொற்கிண்ணத்திற் கொடுப்பார்செழுங்கிளியே 42
தாலாட்டைப்பாடுகிறோம் தங்கநலைகப்போக்கிறோம்
நீலாயதாட்சியமரே நீமகிழ்ந்துநித்திரைசெய் 43
ஆடல்மிகுஞ்சென்னைபுரி அம்பதிவாழ்வேதகிரி
பாடல்கேட்டெங்கள்தவப் பாக்கியமேநித்திரைசெய். 44

பெண்தாலாட்டு-முற்றிற்று.